# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1946/31 - 2015 දෙසැම්බර් මස 22 වැනි අඟහරුවාදා - 2015.12.22

*1946/31 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 9/2014*

**1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் கீழ் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

எஸ். பி. நாவின்ன,
உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சர்.

பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 22.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் ஆட்களைப் பதிவு செய்தல் (திருத்த) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டவையும், 2005, மாச்சு 29 ஆந் திகதிய 1386/17 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும் 2005 ஆம் ஆண்டின் ஆட்களைப் பதிவு செய்தல் ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறானவையும் 1971 ஆம் ஆண்டு திசெம்பர் 30 ஆந் திகதிய 14991 ஆம் இலக்க, வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான 1971 ஆம் ஆண்டின் ஆட்களைப் பதிவு செய்யும் ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) 7 ஆம் ஒழுங்குவிதியில் “படிவம் உ” என்னும் சொற்களுக்குப்பதிலாக “படிவம் ஆ” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) 8 ஆம் ஒழுங்குவிதியில் "படிவம் ஊ" என்னும் சொற்களுக்குப்பதிலாக "படிவம் ஆ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அவ்வொழுங்குவிதியின் 11 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும் :-

"11. சட்டத்தின் 9 (3) ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, தேவைப்படுத்தப்படும் நிழற்படங்கள், நிழற்படங்களை எடுப்பதற்கென ஆணையாளர் தலைமையதிபதியினால் பதிவு செய்யப்பட்ட நிழற்படப்பிடிப்பாளரினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்தொதுக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் எடுக்கப்படுதல் வேண்டும்.";

(4) அவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 12 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-

"12. இச்சட்டத்தின் 9, 16 மற்றும் 17 என்னும் பிரிவுகளின் நோக்கங்களுக்காகச் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் அத்தகைய ஒவ்வொரு நிழற்படமும் பின்வரும் பரிமாணங்களையும், அளவுக்குறிப்பீடுகளையும், நியமங்களையும் மற்றும் தரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) நிழற்பட அளவானது, அகலத்தில் 35 மி. மீ. x உயரத்தில் 45 மி. மீ என்பதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், நிழற்படத்தின் தரமானது, ஆட்களைப் பதிவு செய்தல் ஆணையாளர் தலைமையதிபதியினால் ஏற்பாடு செய்யப்படும் மென்பொருளுக்கிணங்க அல்லது அறிவுறுத்தல்களுக்கிணங்க இருத்தல் வேண்டும் ;

(ii) முகமானது, திறந்த மற்றும் தெளிவாகத் தென்படக்கூடிய கண்களுடனும், மூடிய வாயுடனும், சிரிப்பில்லாமலும், சுயநிலை முகக் குறிப்புடன் இருத்தல் வேண்டும் ;

(iii) தலைமுடியானது, முகத்திலிருந்து விலகியிருத்தல் வேண்டுமென்பதுடன், முகத்தின் விளிம்புகள் தெளிவாகத் தென்படக்கூடியனவாகவிருத்தலும் வேண்டும் ;

(iv) மூக்குக் கண்ணாடிகளிலிருந்து (ஏற்புடையதாயின்) பிரதிபலிப்புகள் எவையும் தென்படக்கூடியன வாகவிருத்தலாகாது. வில்லைகளினூடாகக் கண்கள் தெளிவாகத் தென்படக்கூடியனவாக இருத்தல் வேண்டுமென்பதுடன், தெளிவான (நிறப்பூச்சிடப்படாத) வில்லைகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன;

(v) வெளிச்சமிடுகை ஒரு சீரானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், நிழல்களை, கூசொளியை அல்லது பளிச்சீட்டுப் பிரதிபலிப்புகளைக் காண்பித்தலுமாகாது;

(vi) நிழற்படத்தின் காட்சிப்படுத்தலும் வெண்நிறப் பின்புலமும் விண்ணப்பகாரரின் இயற்கையான தோல் நிறத்தைப் பிரதிபலித்தல் வேண்டும் ;

(vii) தோற்றநிலை நேராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், முகமும் தோள்களும் நிழற்படக் கருவிக்கு நடுவிலும் எல்லாப் புறமும் சரிசமமாகவும்இருத்தலும் வேண்டும் ;

(viii) பின்னணியானது, ஒரு சீராகவும் அலங்காரங்களின்றியும் வடிவங்களில்லாமலும் இளநீல நிறத்திலும் இருத்தல் வேண்டும் ;

(ix) உருவமானது, தெளிவாகவும் கூர்மையாகவும் ஒருநிலைப்படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் ;

(x) நிழற்படமானது, உயர்தொழில்சார் அச்சிடும் ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தி நிறத்தில் அச்சிடப்படுதல் வேண்டும்;

(xi) நிழற்படமானது, எவ்வகையிலும் மாற்றப்படுத்தலாகாதென்பதுடன், விண்ணப்பகாரரின் இயற்கை நிலையில் எடுக்கப்படுதலும் வேண்டும் .

(5) அவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 13 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-

"13. (1) சட்டத்தின் 52 (2) (உ) (ii) என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக, உயர்தொழில்சார் நிழற்படப்பிடிப்பாளரான ஆளொருவர் சட்டத்தின் கீழ் பதிவு செய்தலுக்காக நிழற்படங்களை எடுத்தல் மற்றும் அடையாள அட்டைகளை வழங்குதல் ஆகிய நோக்கத்திற்காக நிழற்படப்பிடிப்பாளராக பதிவு செய்யப்படுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம் ;

(2) விண்ணப்பகாரர் பின்வருவனவற்றை எண்பித்தல் வேண்டும் :-

(அ) ஒழுங்குவிதி 12 இல் விதிக்கப்பட்ட நியமங்களுக்கிணங்க நிழற்படங்களை எடுப்பதில் விண்ணப்பகாரருடைய தகைமை ; அத்துடன்

(ஆ) விண்ணப்பகாரர் நிழற்படங்களை எடுப்பதற்காக தேவைப்படுத்தப்படும் அவசியமான உபகரணத்தினை விண்ணப்பகாரர் உடமையில் கொண்டுள்ளார் ;

(3) இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதிக்கு முன்னரான நாளன்று பதிவு செய்யப்பட்ட நிழற்படப்பிடிப்பாளரான ஆளொவ்வொருவரும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியினுள் ஆணையாளர் தலைமையதிபதியுடன் மீளப்பதிவு செய்தல் வேண்டும்.";

(6) அவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 14 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-

"14. ஆணையாளர் தலைமையதிபதி குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கின்றவரான நிழற்படப்பிடிப்பாளரொருவரை பதிவு செய்யலாம் அல்லது நிழற்படப் பிடிப்பாளரொருவராகப் பதிவு செய்வதற்கு மறுக்கலாம்." ;

(7) அவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 15 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-

"15. (1) ஆணையாளர் தலைமையதிபதியானவர் அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய ஒழுங்குவிதி 14 இன் கீழான பதிவுச் சான்றிதழொன்றை வழங்கலாம் ;

(2) எந் நியதி அல்லது நிபந்தனைக்கமைய பதிவுச்சான்றிதழ் வழங்கப்பட்டதோ அந்நியதி அல்லது அந்நிபந்தனையின் மீறுகைக்காக அல்லது நிறைவேற்ற முடியாமைக்காக, ஆணையாளர் தலைமையதிபதியானவர் பதிவுச் சான்றிதழை இல்லாதொழிக்கலாம் :

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய இல்லாதாக்கலுக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதி எவ்வாளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதோ, அவ்வாள் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றினை அளித்தல் வேண்டும் ;

(3) பதிவுச் சான்றிதழொன்று அத்தகைய சான்றிதழின் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு வலிதாகவிருத்தல் வேண்டும் ;

(4) நிழற்படப் பிடிப்பாளரொருவருக்கு வழங்கப்படும் பதிவுச்சான்றிதழ் ஒவ்வொன்றும் ஆண்டுதோறும் மீளப்புதுப்பிக்கப்படுதல் வேண்டும்" ;

(8) அவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 16 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-

"16. (1) சட்டத்தின் கீழ் நிழற்படப்பிடிப்பாளரொருவராக ஆளொருவரை பதிவு செய்தலுக்கான பதிவுக்கட்டணம் பத்தாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

(2) பதிவுச்சான்றிதழொன்றினை மீளப்புதுப்பிப்பதற்கான பதிவுக் கட்டணம் இரண்டாயிரம் ரூபாவாதல் வேண்டும்.";

(9) அவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 17 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-

"17. சட்டத்தின் கீழ் நிழற்படப்பிடிப்பாளராக ஆணையாளர் தலைமையதிபதியினால் பதிவு செய்யப்பட்ட ஆளொவ்வொருவருக்கும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள "படிவம் எ" வில் பொருளளவில் உள்ளவாறான பதிவுச்சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.".

(10) அதன் அட்டவணையிலுள்ள "படிவம் ஆ" மற்றும் "படிவம் ஈ" என்பவற்றினை இத்தால் நீக்கிவிட்டு இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான படிவம் "ஆ" மற்றும் படிவம் "ஈ" என்பனவாகப் பதிலிடப்படுகின்றன ;

(11) அட்டவணையிலுள்ள "படிவம் உ" மற்றும் "படிவம் ஊ" என்பன இத்தால் நீக்கப்படுகின்றன ;

(12) அதன் அட்டவணையிலுள்ள "படிவம் எ" என்பதனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் "எ" என்பதனை இடுவதன் மூலமும்.

ஆ. ப. தி. 1,7, 8

விண்ணப்பப்படிவம் கட்டணமின்றி வழங்கப்படுகின்றது. தொடர் இல. : [ ]

QR
குறியீடு

**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்**

படிவம் "ஆ"

**1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 9, 16 மற்றும் 17 என்னும் பிரிவுகளின் கீழ் அடையாள அட்டையொன்றுக்கான விண்ணப்பம்**

| மாவட்டம் | பி. செ. பிரிவு | கி. அ. இலக்கமும் பிரிவும் |
|---|---|---|
| | | |

***அலுவலகப் பாவனைக்கு***

அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

| பதிவலுவலரின் குறியீடும் முதலெழுத்துக்களும் | | |
|---|---|---|

விண்ணப்பப்படிவமானது அறிவுறுத்தல் கைநூலில் அடங்கியுள்ள அறிவுறுத்துதல்களுக்கிணங்க நிரப்பப்படுதல் வேண்டும்.

**பாகம் ஒன்று - விண்ணப்பக்காரரினால் நிரப்பப்படுதல் வேண்டும்**

முழுப்பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்)

1\.
குடும்பப்பெயர்

பெயர்

தகப்பனின் பெயர்

முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2\.
குடும்பப்பெயர்

பெயர்

தகப்பனின் பெயர்

அடையாள அட்டையில் தோன்ற வேண்டிய பெயர் (01 ஆம் கூட்டில் உள்ள பெயரிலிருந்து பெயர் வேறுபட்டிருப்பின்)

3\.
குடும்பப்பெயர்

பெயர்

தகப்பனின் பெயர்

4\. பால் : பெண் ஆண்

5. குடியியல் அந்தஸ்து : ☐ திருமண மானவர் ☐ திருமண மாகாதவர் ☐ தாரமிழந்தவர் ☐ மணநீக்கஞ் செய்தவர்

6. உயர்தொழில்/தொழில்/ பதவிப் பெயர்

7. பிறப்பு விபரங்கள் :

7.1 பிறந்த திகதி

7. 2 பிறப்புச் சான்றிதழ் இல.

7.3 பிறப்பிடம்

7.4 பிரிவு

7.5 மாவட்டம்

விண்ணப்பகாரர் இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின், 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பிரசாவுரிமைச் சட்டத்தின் பிரிவு 5 (2) இன் கீழ் வழங்கப்பட்ட பிரசாவுரிமைச் சான்றிதழின் விபரங்கள் :

7.6 பிறந்த நாடு

7.7 நகரம்

7.8 பிரசாவுரிமைச் சான்றிதழ் இல.

8. வதிவிட விபரங்கள்

8.1 நிரந்தர முகவரி

வீட்டின் பெயர் அல்லது இலக்கம்

கூட்டாட்சியாதனத்தின், அடுக்குவீட்டின், வீடமைப்புத் திட்டத்தின், குடிமனையின், தோட்டத்தின் அல்லது வேறேதேனும் கட்டிடத்தின் பெயர்

வீதி /தெரு/ ஒழுங்கை/இடம் /தோட்டம்

கிராமம்/ நகரம்

அஞ்சற்குறியீடு

8. 2 அஞ்சல் முகவரி :

வீட்டின் பெயர் அல்லது இலக்கம்

கூட்டாட்சியாதனத்தின், அடுக்குவீட்டின், வீடமைப்புத் திட்டத்தின், குடிமனையின், தோட்டத்தின் அல்லது வேறேதேனும் கட்டிடத்தின் பெயர்

வீதி/தெரு/ ஒழுங்கை/இடம்/தோட்டம்

அஞ்சற் குறியீடு

9. பிரசாவுரிமைச் சான்றிதழ்/இரட்டைப் பிரசாவுரிமைச் சான்றிதழ் விபரங்கள் :
(பொருத்தமற்றதைக் கீறிவிடவும்)

9. 1 சான்றிதழ் இல.

9. 1 சான்றிதழ் வழங்கப்பட்ட திகதி

அடையாள அட்டையின் இணைப்பிரதிக்காக விண்ணப்பிக்கப்படின் தயவுசெய்து கூடு இல. 10 இனை நிரப்பவும்.

10. (இயைபான கூட்டில் ✓ என அடையாளமிடவும்).

☐ 10. 1 அடையாள அட்டை காணாமற் போயிருப்பின்

☐ 10. 2 அடையாள அட்டையில் திருத்தங்களைச் செய்வதற்கு

☐ 10.3 செல்லுபடியாகும் காலப்பகுதியை புதுப்பிப்பதற்கு

☐ 10.4 அடையாள அட்டை (சேதப்படுத்தப்படின் /உருவழிக்கப்படின்/வாசிக்க முடியாதிருப்பின்)

10.5 காணாமற்போன அல்லது கடைசியாகப் பெறப்பட்ட அடையாள அட்டையின்
இலக்கம் :

10.6 அடையாள அட்டை வழங்கப்பட்ட திகதி :

10.7 காணாமற்போன அடையாள அட்டை தொடர்பான பொலிஸ் அறிக்கையின் அல்லது வேறு ஆவணத்தின் விபரங்கள்

பொலிஸ் நிலையத்தின் பெயர்

பொலிஸ் அறிக்கை வழங்கப்பட்ட திகதி

11. விசாரணைகளுக்காக தேவைப்படுத்தப்படும் விபரங்கள் :

| | வதிவிடம் | கையடக்கத்தொலைபேசி |
|---|---|---|
| 11.1 தொலைபேசி இலக்கம் : | | |

11.2 மின்னஞ்சல் :

இங்கு நிழலுருவெடுத்தலுக்கான ஒட்டவும்

இங்கு ஒட்டவும்

அலுவலரின் கையொப்பமும் அலுவலக முறையான இலச்சினையும்

**விண்ணப்பகாரரின் வெளிப்படுத்துகை :**

(1) நான் இலங்கைப் பிரசையாகவுள்ளேன் என வெளிப்படுத்துகின்றேன்.

(2) நான் இவ்விண்ணப்பப்படிவத்தை நிரப்புமுன்னர் இதனோடிணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கைநூலை வாசித்து விளங்கிக்கொண்டேன் என வெளிப்படுத்துகின்றேன்.

(3) நான் எனது நிழற்படங்களின் இரண்டு பிரதிகளை உள்ளடக்குகின்றேன்.

(4) நான்............. ஆம் இலக்கத்தைக் கொண்ட அடையாள அட்டையை/......................... ஆம் இலக்கத்தைக் கொண்ட தொலைந்த அடையாள அட்டைக்குப் பதிலாக, பெற்றுக்கொண்ட பொலிஸ் அறிக்கையை சான்றுப்படுத்தும் அலுவலருக்கு இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

(5) நான் இவ்விண்ணப்பத்திற்கு முன்னர் வேறு ஏதேனும் விண்ணப்பத்தை செய்திருக்கின்றேன்/செய்யவில்லையென வெளிப்படுத்துகின்றேன்.

* (பொருத்தமற்றதைக் கீறிவிடுக).

(6) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையுமென நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

(7) இவ்விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து கொடுத்துதவப்பட்ட எல்லா ஆவணங்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையும் என்றும் அத்துடன் உண்மையான விபரங்களை மறைக்கும் பொருட்டு அவை போலியாகப் புனையப்படவில்லை அல்லது மாற்றங்களுக்கு உட்படவில்லை என்றும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். அத்துடன் 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான பதிவின் மீது அடையாள அட்டைக்கு/இணைப்பிரதி அட்டையொன்றுக்காக விண்ணப்பிக்க தகைமையுடையவனாவேன். பிழையான விவரங்கள், தகவல்கள் அல்லது ஆவணங்களைக் கொடுத்துதவுதல் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாகும் என்ற நிகழ்வை நான் அறிவேன்.

திகதி : | | | | | | | | |

விண்ணப்பதாரரின் கையொப்பம் அல்லது இடது கைப்பெருவிரலடையாளம்

**பாகம் II - சான்றுப்படுத்தும் அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்**

சான்றுப்படுத்தும் அலுவலரின் அத்தாட்சிப்படுத்துகை :

இவ்விண்ணப்பத்தில் ஒட்டப்பட்ட நிழற்படமும் இவ்விண்ணப்பப்படிவத்தில் கொடுத்துதவப்பட்ட விவரங்களும்,........................ ஆம் இலக்கத்தைக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் 8 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட முகவரியில் வதிகின்ற ............................................ என்பவரின் நிழற்படமும் விபரங்களும் என்றும், ஒட்டப்பட்ட நிழற்படம் பொய் வேடமோ அல்லது மறைத்தலோ இன்றி விண்ணப்பகாரரின் இயற்கையான தோற்றத்தைக் குறித்துக்காட்டுகின்றது என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். எனது கையொப்பமும் அலுவலமுறையான இலச்சினையும் அதனை உறுதிப்படுத்துவதற்கு அதே நிழற்படத்தில் இடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பதாரியின் கையொப்பம்/ இடது பெருவிரலடையாளம் விண்ணப்பதாரியினால் என்முன் இடப்பட்டது.

சான்றுப்படுத்தும் அலுவலரின் பெயர் :

திகதி : | | | | | | | | |

சான்றுப்படுத்தும் அலுவலரின் கையொப்பமும் அலுவலகமுறையான இலச்சினையும்

மேலொப்பமிடப்பட்டது.

பிரதேச செயலாளரின் கையொப்பமும் அலுவலக முறையான இலச்சினையும்

செய்யப்படும் கொடுப்பனவுகளின் விபரங்கள் :

கட்டணம் செலுத்தப்படும் விபரங்கள் :

| பற்றுச்சீட்டின் அல்லது சான்றிதழின் இலக்கம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

இங்கு முத்திரைகளை /சான்றிதழை/பற்றுச்சீட்டை ஒட்டவும் :

அலுவலகப் பாவனைக்காக மட்டும் :

குறிப்புகள் :

**பாகம் II - அடையாள அட்டைக்காக விண்ணப்பித்தமைக்காக விநியோகிக்கப்படும் ஏற்புறுதிப்பற்றுச்சீட்டு**

QR
குறியீடு

................................ ஆந் திகதியன்று வண./அருட்திரு. /திரு. /திருமதி/செல்வி.................................. என்பவரினால் அடையாள அட்டைக்காக கையளிக்கப்பட்ட ........................................ ஆம் இலக்கத்தைக் கொண்ட விண்ணப்பப்படிவம், ஆட்களைப் பதிவு செய்தல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதற்காக என்னால் பெறப்பட்டதென இத்தால் அறிவிக்கின்றேன்.

சான்றுப்படுத்தும் அலுவலரின் பெயர் :

திகதி : | | | | | | | | சான்றுப்படுத்தும் அலுவலரின் கையொப்பமும் அலுவலகமுறையான இலச்சினையும்

....................................................................................... இங்கு கிழித்தெடுக்கவும். ..........................................................

விண்ணப்பப்படிவம் “ஆ”வை நிரப்புதல் தொடர்பிலான அறிவுறுத்துரைகள் :

1. விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு நீல அல்லது கறுப்புகுமிழ்முனைப் பேனாவை மட்டுமே பயன்படுத்தவும். ஒரு சதுரத்தில் ஓர் எழுத்தை மட்டுமே எழுதவும். நிழற்படங்கள் நிறத்திலிருத்தலும் 35 மி. மீ அகலம் x 45 மி.மீ உயரம் என்ற அளவாகவிருத்தலும் வேண்டும். நிழலுரு வெடுத்தலுக்கான நிழற்படத்தில் எதுவும் எழுதப்படுதலாகாதென்பதுடன், அது உருவழிக்கப்படுதலுமாகாது.

2. தெளிவான, வாசிக்கத்தக்க கையெழுத்தில் தயவு செய்து எழுதவும்.

3. கூடு 1 சிங்கள அல்லது தமிழ் எழுத்துக்களில் நிரப்பப்படுதலும் கூடு 2 ஆங்கில எழுத்துக்களில் நிரப்பப்படுதலும் வேண்டும்.

4. ஒவ்வொரு முழுச்சொல்லுக்கும் பின்னர் ஒரு சதுரத்தை வெறுமையாக விடவும்.

5. ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு, கிராம அலுவலருக்கு, பிரதேச செயலாளருக்கு அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு செலுத்தப்பட்ட கட்டணத்தின் ஏற்புறுதிப் பற்றுச்சீட்டு ஒட்டப்படுதல் வேண்டும். அத்துடன் பற்றுச்சீட்டிலக்கமும் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். முத்திரைகளில் செலுத்தப்பட்டிருப்பின், முத்திரைகள் ஒட்டப்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பமானது கிராம அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படின், வதிவை எண்பிப்பதற்கு வேறு ஆவணங்களெவையும் தேவைப்படுத்தப்படமாட்டாது. வேறெவரேனும் அலுவலர் அத்தாட்சிப்படுத்தினால், வதிவை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்கள் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பகாரரின் கையொப்பம் அல்லது இடதுகைப் பெருவிரலடையாளம் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முன்னிலையில் இடப்படுதல் வேண்டும்.

8. கிராம அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம், பிரதேச செயலாளர் அல்லது உதவிப் பிரதேச செயலாளர் அல்லது நிர்வாக அலுவலர் அல்லது நிர்வாக கிராம அலுவலரினால் மட்டுமே மேலொப்பமிடப்படுதல் வேண்டும்.

9. கூடுகளை நிரப்பும்போது பின்வரும் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ்/ உத்தேச வயதுச் சான்றிதழ்/ பிரசாவுரிமைச் சான்றிதழ்/ இரட்டைப் பிரசாவுரிமைச் சான்றிதழ்/ குருத்துவநிலையை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்/ மகவேற்புச் சான்றிதழ் என்பனவற்றில் காணப்படுகின்றதான முழுப்பெயரினை எழுதவும். விண்ணப்பப்படிவமானது பின்வரும் படிவத்துக்கிணங்க நிரப்பப்படுதல் வேண்டும். குடும்பப்பெயர் அல்லது தகப்பனின் பெயர் இல்லாதிருப்பின் கூட்டை வெறுமையாக விடவும் :

"பிரசாவுரிமைச் சான்றிதழ்" என்பது, முறையே 1949 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இந்திய பாகிஸ்தானிய வதிவோர் (பிரசாவுரிமைச்) சட்டம் அல்லது 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இந்திய- இலங்கை உடன்படிக்கை (நடைமுறைப்படுத்தல்) சட்டம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் மற்றும் 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பிரசாவுரிமைச் சட்டம் அல்லது 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் அல்லது 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் சட்டம் அல்லது 2008 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என்பவற்றின் கீழ் வழங்கப்படும் பிரசாவுரிமைச் சான்றிதழ் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குடும்பப்பெயர் | N | E | W | U | N | G | A | L | A | | | | | | |
| | J | A | G | O | D | A | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| பெயர் | C | H | A | M | I | N | D | A | | | | | | | |
| | J | A | Y | A | L | A | L | | | | | | | | |
| தகப்பனின் பெயர் | S | E | N | A | R | A | T | N | E | | | | | | |

(ii) கூடு 1 இல், சிங்கள அல்லது தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள பெயர் கூடு 2 இல், ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில் எழுதப்படுதல் வேண்டும்.

(iii) அடையாள அட்டையில் சேர்க்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் மேலேயுள்ள கூடு 1 இல் குறிப்பிடப்பட்ட பெயரல்லாத வித்தியாசமான பெயரொன்று அத்தகைய பெயர் கவனத்துட்கொள்ளப்படுவதற்காக கூடு 3 இல், உள்ளடக்கப்படுதல் வேண்டும். அப்பெயர் பிறப்புச் சான்றிதழில் காணப்படுகின்ற பெயரிலிருந்து வித்தியாசப்படின், அத்தகைய பெயரை எண்பிப்பதற்காக எழுத்திலான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ;

(iv) கூடு 6 இன் நோக்கத்திற்காக தொழிலை/உயர்தொழிலை/பதவிப்பெயரை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழை/ஆவணமுறையான எண்பிப்பை இணைத்தல் வேண்டும்.
(6 மாதங்களுக்கு மேற்படாமல் பெற்றுக்கொண்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்).

(v) பிறப்புச் சான்றிதழின் விபரங்களுக்கிணங்க 7.1 முதல் 7.5 வரையிலான கூடுகளை நிரப்பவும். 7. 6 முதல் 7.9 வரையிலான கூடுகள் இலங்கைக்கு வெளியே பிறந்த ஆட்களினால் நிரப்பப்படுதல் வேண்டும். இலங்கைக்கு வெளியே பிறந்த பிள்ளையொன்றின் பெற்றோர்களில் ஆகக்குறைந்தது ஒருவர் இலங்கையராகவுள்ள விடயத்தில், 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பிரசாவுரிமைச் சட்டத்தின் பிரிவு 5 (2) இன் கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழின் இலக்கமானது உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(vi) கூடு 8.1 இல் நிரந்தரமான முகவரியை எழுதவும். விண்ணப்பகாரர் கூடு 8.1 இல் சுட்டிக்காட்டப்பட்ட வேறு முகவரி தவிர்ந்த வித்தியாசமான முகவரியில் வசித்தால் மட்டுமே கூடு 8.2 நிரப்பப்படுதல் வேண்டும்.

(vii) கூடு 9 பதிவின் மூலம் இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டுள்ள அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுள்ள ஆட்களினால் மட்டும் நிரப்பப்படுதல் வேண்டும். இயைபான சான்றிதழின் விபரங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(viii) அடையாள அட்டையின் இணைப்பிரதிக்காக விண்ணப்பிக்கப்பட்டால் மட்டுமே கூடு 10 நிரப்பப்படுதல் வேண்டும். அடையாள அட்டை காணாமல் போனமை தொடர்பிலான பொலிஸ் பதிவேட்டின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ix) விண்ணப்பத்தின் நிலைமை பற்றி தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்புகொள்ள வேண்டிய விவரங்களை கூடு 11 இல் உள்ளடக்குதல் வேண்டும்.

10. விண்ணப்பத்துடன் இணைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட இயைபான ஆவணங்களின் நிழற்படப்பிரதி :-

(மேலதிக அறிவுறுத்தல்களுக்காக கிராம அலுவலருடன் தொடர்புகொள்ளவும்).

(i) சான்றுப்படுத்தும் அலுவலர்களினால் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ் அல்லது அண்ணளவு வயதுச்சான்றிதழொன்றின் நிழற்படப்பிரதி;

(ii) 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் 56 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஆவணங்களின் - தேடுதல் விளைவுப் பத்திரம் மற்றும் பெயரையும் பிறப்புத் திகதியையும் எண்பிக்கமுடியுமான ஏவையேனும் வேறு ஆவணங்கள் உள்ளடங்கிய சத்தியக்கடதாசி ;

(iii) சான்றுப்படுத்தும் அலுவலரினால் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட திருமணச் சான்றிதழின் நிழற்படப் பிரதியொன்று (திருமணமான பெண்ணொருவரினால் கணவரின் பெயர் அடையாள அட்டையில் சேர்க்கப்படுவதற்குத் தேவைப்படின்) ;

(iv) சான்றுப்படுத்தும் அலுவலரினால் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட பிரசாவுரிமைச் சான்றிதழ்/ இரட்டைப் பிரசாவுரிமைச் சான்றிதழின் நிழற்படப் பிரதி ;

(v) சான்றுப்படுத்தும் அலுவலரினால் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட துறவு நிலையிலுள்ளவரின்/குருத்துவ நிலையில் உயர்வான பதவியளிப்புச் சான்றிதழ் என்பவற்றின் நிழற்படப்பிரதி.
(குருத்துவ பெயரில் அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும் போது).

(vi) சான்றுப்படுத்தும் அலுவலரினால் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட குருத்துவ ஆடை களைதற் சான்றிதழ்களின் நிழற்பிரதி (குருத்துவ ஆடை களைந்த பின்னர் குருத்துவஞ்சாராப் பெயரில் அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பிக்கும் போது) ;

(vii) சான்றுப்படுத்தும் அலுவலரினால் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட எவையேனும் இயைபான அமைச்சுக்களினால் / திணைக்களங்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது ஏதேனும் மதத்தின் குருவாகவிருப்பதனை உறுதிப்படுத்தும் ஆவணம் என்பவற்றின் நிழற்படப்பிரதி.

(viii) உரிய காலப்பகுதியின் போது விண்ணப்பிப்பதற்கு இயலாதிருந்தமைக்கான விண்ணப்பகாரரினால் எடுத்துக்காட்டப்படுகின்ற காரணங்களை உள்ளடக்கிய பிரதேச செயலாளரின் அறிக்கை.

"ඇ" ආකෘති පත්‍රය
*படிவம் "ஈ"*
Form "D"

ශ්‍රී ලංකා
*இலங்கை*
SRI LANKA

හැදුනුම්පත
*அடையாள அட்டை*
IDENTITY CARD

ඉල්ලුම්කරුගේ ජායාරූපය
*விண்ணப்பகாரரின் புகைப்படம்*
Photograph of the applicant

නම :
*பெயர்* :
Name :

ස්ත්‍රී/ පුරුෂ භාවය :
*பால்* :
Sex :

උපන් දිනය :
*பிறந்த திகதி* :
Date of Birth :

දරන්නාගේ අත්සන
*வைத்திருப்பாளரின் கையொப்பம்*
Holder's Signature.

ජාතික හැදුනුම්පත් අංකය :
*அடையாள அட்டை இல.* :
Identity Card No :

---

ලිපිනය :
*முகவரி* :
Address :

උපන් ස්ථානය :
*பிறப்பிடம்* :
Place of Birth :

නිකුත් කළ දිනය :
*வழங்கப்பட்ட திகதி* :
Date of issue :

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ කොමසාරිස් ජනරාල්වරයාගේ අත්සන
*ஆட்களைப் பதிவு செய்தல் ஆணையாளர் தலைமையதிபதியின் கையொப்பம்*
The Signature of the Commissioner General for Registration of Persons

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ කොමසාරිස් ජනරාල්
*ஆட்களைப் பதிவு செய்தல் ஆணையாளர் தலைமையதிபதி*
Commissioner General for Registration of Persons

1968 අංක 32 දරන පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ පනත
*1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டம்*
Registration of Persons Act, No. 32 of 1968

(ஒழுங்குவிதி 17)

**1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க,**
**ஆட்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**படிவம் "எ"**

| சான்றிதழ் இல. | |
|---|---|

நிழற்படப்பிடிப்பாளரொருவராக பதிவுச்சான்றிதழ்

1. நிழற்படப்பிடிப்பு நிலையத்தின் பெயர் :

2. நிழற்படப்பிடிப்பு நிலையத்தின் முகவரி :

3. வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் பதிவுத் திகதி :

4. உரிமையாளரின் பெயர் :

5. உரிமையாளரின் வதிவிட முகவரி :

6. பதிவு இலக்கம் :

7. பதிவுத் திகதி :

8. பதிவின் முடிவுத் திகதி :

நிழற்படமெடுப்பதற்கான வசதிகளைக் கொண்ட நிழற்படப்பிடிப்பு நிலையத்தினை வைத்திருக்கின்றவரான மேலே விபரிக்கப்பட்ட ஆள், இச்சான்றிதழின் நிழற்படங்களை எடுப்பதற்காக மறுபக்கத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் நிழற்படப்பிடிப்பாளராக பதிவு செய்யப்பட்டுள்ளார் என இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

............................................
ஆணையாளர் தலைமையதிபதி
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்.

................................
திகதி

**நிபந்தனைகள்**

பதிவு செய்யப்பட்ட நிழற்படப்பிடிப்பாளர் பின்வரும் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் :-

1. எவரேனும் விண்ணப்பகாரரினது நிழற்படங்கள் ஒழுங்குவிதி 12 இற்கிணங்க எடுக்கப்படுதல் வேண்டும்.

2. நிழற்படங்களின் இரண்டு பிரதிகளானவை ஒவ்வொரு விண்ணப்பகாரருக்கும் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நிழற்படங்களின் டிஜிடல் பிரதியானது, வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

3. பதிவு செய்யப்பட்ட நிழற்படப்பிடிப்பாளரொருவரினால் நிழற்படத்தின் இரண்டு பிரதிகளுக்காக செலுத்தப்படக்கூடியவாறான ஆகக்கூடுதலான கட்டணமானது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 36 (2) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், வர்த்தமானியினூடாக வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

4. பற்றுச்சீட்டொன்று ஒவ்வொரு விண்ணப்பகாரருக்கும் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பழுதடைந்த நிழற்படம் எனும் விடயத்தில் ஒழுங்குவிதி 12 உடன் இணங்கியொழுகுகின்றதான புதிய நிழற்படமானது கட்டணமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

5. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் மென்பொருளானது வேறு எவரேனும் திறத்தவருக்கு கைமாற்றப்படுதலாகாது.

6. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் மென்பொருளானது மாற்றங்களுக்குட்படுதலாகாது.

7. மென்பொருளானது ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கிணங்க பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

8. பதிவு செய்யப்பட்ட நிழற்படப்பிடிப்பாளரொருவர் அவசியமேற்படும் போது பிரதேச செயலாளர்களினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான நடமாடும் சேவைகளில் விண்ணப்பகாரர்களின் நிழற்படப்பிரதிகளை எடுப்பதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*1- 417*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.